சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 10528/அ5 /2021 நாள். 02.02.2022

பொருள் பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - 2021-2022 கல்வியாண்டு -10 மற்றும் 12 ஆம் வகுப்பு - முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வு நடத்துதல் - கால அட்டவணை- அனுப்புதல் -சார்ந்து

.............

மாநில பாடத்திட்டத்தின் கீழ் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முதல் திருப்புதல் தேர்வு 09.02.2022 முதல் 16.02.2022 வரையிலும் இரண்டாம் திருப்புதல் தேர்வு 28.03.2022 முதல் 05.04.2022 வரையிலும் நடைபெற உள்ளது. இத்திருப்புதல் தேர்வை சிறப்பாக நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

- 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு நடைபெறும் முதல் மற்றும இரண்டாம் திருப்புதல் தேர்வு கால அட்டவணை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.
- தலைமையாசிரியர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தேர்வு நடைபெறும் நாட்களை முன்கூட்டியே தெரிவித்து அனைத்து மாணவர்களும் தேர்வு எழுதுவதை உறுதி செய்ய வேண்டும்.
- விடைத்தாளில் பள்ளியின் பெயர் மற்றும் முத்திரை இடம் பெறக்கூடாது.
- விடைத்தாளில் தேர்வு எண், வகுப்பு, தேதி பாடம் மட்டும் இடம்பெற வேண்டும்
- பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தங்களது விடைத்தாட்களில் தேர்வு எண்ணாக **நிரந்திர பதிவெண்ணை** ( PERMANENT REGISTER NUMBER) ஐ எழுத வேண்டும்
- பத்தாம் வகுப்பு மாணவர்கள் தங்களது விடைத்தாட்களில் தேர்வு எண்ணாக மாணவர்களின் EMIS எண்ணின் கடைசி 5 இலக்க எண்களோடு வரிசை எண்ணையும் இணைத்து 8 இலக்க எண்ணாக எழுத வேண்டும்
- உதாரணம். 10805 வ.எண் 001 **தேர்வு எண் 10805001**
- பள்ளி வளாகத்தை தூய்மையாகவும் தேர்வு அறைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ஒரு அறைக்கு 20 மாணவர்கள் மட்டுமே அமர வைக்க வேண்டும்.
- நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக கடைபிடித்து தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்

- அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் பொறுப்பு ஆசிரியர்கள் மூலம் தேர்வு நடைபெறும் ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணிக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வினாத்தாள் கட்டுக்காப்பு மையப் பள்ளியிலிருந்து வினாத்தாள்களை பெற்றுக் கொண்டு மந்தன முறையில் பள்ளிக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்
- வினாத்தாட்களை பெறும் பொறுப்பாசிரியர்கள் தங்கள் வினாத்தாள்களை பள்ளியின் பெயர், பாடம், மொழி மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
- தினமும் வினாத்தாள் பெறும் பொறுப்பு ஆசிரியர்களிடம் கையெழுத்து பெற்றுக் பதிவேடு பராமரிக்க வேண்டும்.
- தினமும் ஒரே நபர் மூலம் வினாத்தாள்களை பெற்றுக் கொள்வதற்கு சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரை அறிவுறுத்த வேண்டும்.
- விடைத்தாள்களை தேர்வு முடிந்தவுடன் 10 ஆம் வகுப்பு ( 10 மணி முதல் 1 மணி வரை) 12 ஆம்வகுப்பு ( 2 மணி முதல் 5 மணி வரை) 10 மற்றும் 12 ஆம்வகுப்பு என தனித்தனி கட்டுகளாக கட்டி சீல் இட்டு வினாத்தாள் கட்டின் மேல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட வேண்டும்.

  பள்ளியின் பெயர் : தேதி :

  பாடம் : பயிற்று மொழி:

  மொத்த வினாத்தாள்களின் எண்ணிக்கை:

  அக்கட்டுகளை தலைமையாசிரியர் தனி அலமாரியில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- தங்கள் பள்ளிக்கு மதிப்பீடு செய்வதற்கான விடைத்தாள் கட்டுகளை வினாத்தாள் கட்டுக் காப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்
- மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை மதிப்பீடு செய்யப்பட்ட பள்ளியிலேயே பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். விடைத்தாள்கள் ஆய்வுக்கு உட்பட்டவை ஆகும்
- மதிப்பெண் பட்டியல் உரிய படிவத்தில் மாவட்டக்கல்வி அலுவலர் அலுவலகத்தில் குறிப்பிடப்படும் தேதியில் மூன்று பிரதிகள் மதிப்பீடு செய்யப்பட ஆசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பத்துடன் ஒப்படைக்கப்பட வேண்டும்

- தேர்வுகள் அனைத்தையும் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் சிறப்பாக நடத்துமாறும் மந்தனத்தை கடைபிடிக்குமாறும் அனைத்து வகை தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

  குறிப்பு: 10.02.2022 **அன்று உள்ளாட்சித் தேர்தலுக்கான 2ஆம் பயிற்சி வகுப்பு நடைபெறுவதால் பள்ளித் தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் பயிற்சி வகுப்பிற்கு செல்லாத ஆசிரியர்களை கொண்டு தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் சுமூகமாக நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்**

  இணைப்பு. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வு கால அட்டவணை

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்
2. கல்வி அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை-03 ( தொடர் நடவடிக்கைக்காக)
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் , சென்னை மாவட்டம் ( தொடர் நடவடிக்கைக்காக)

நகல்

1. சென்னை-06 பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
2. சென்னை -06 அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
3. சென்னை-06 மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது